# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1756/27 - 2012 මැයි 04 වැනි සිකුරාදා - 2012.05.04

*1756/27 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 3/2006*

***2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம்***

*2006 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நிதியியல் உளவறிதற் பிரிவினால் ஆக்கப்பட்ட விதிகள்*

நிதியியல் உளவறிதல் பிரிவு
(நிதியியல் உளவறிதற் பிரிவிற்காகவும்
அதன் சார்பிலும் கையொப்பமிடப்பட்டது)

கொழும்பு,
*2012, மே 04.*

விதிகள்

*2011 மாச்சு 28 ஆந் திகதிய 1699/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, உரிமம் பெற்ற வங்கிகள், பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் (உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்துகொள்ளுங்கள் (உ.வா.தெ.)) அத்துடன் வாடிக்கையாளர்களின் உரிய விழிப்புக் கவனம் (வா.உ.வி) விதிகள் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன.*

*(1) அதன் பாகம் 1 இன் 8 ஆம் விதியை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:*

*"8. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் கொடுக்கல் வாங்கலின் அல்லது இணைந்த கொடுக்கல் வாங்கல் தொடரின் தொகை இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சுமிடத்து தனியொரு கொடுக்கல் வாங்கல் அல்லது அவ்வப்போது இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் இந்த விதிகளின் 4 ஆம் விதியில் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச தகவலைப் பெறுதல் வேண்டும்:*

*ஆயின், எவ்வாறாயினும், கொடுக்கல் வாங்கல் அல்லது இணைந்த கொடுக்கல் வாங்கல்களின் தொடர் சந்தேகத்திற்கிடமானது அல்லது வழமைக்கு மாறானது என சந்தேகிப்பதற்கு நிதி நிறுவனம் நியாயமான ஏதுக்களைக் கொண்டிருந்தால், நிதி நிறுவனம் மேலே அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட தொகையைப் பொருட்படுத்தாமல் அத்தகைய குறைந்தபட்ச தகவலைப் பெறுதல் வேண்டும் ."; அத்துடன்*

*(அ) அதன் 6 ஆம் பந்தியை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-*

*"6. ஒவ்வொரு நிதி நிறுவனமும் இயைபான அதிகாரிகளால் காலத்துக்குக்காலம் வழங்கப்பட்டதான அறியப்பட்ட அல்லது சந்தேகிக்கப்பட்ட பயங்கரவாத நிரல் அல்லது எச்சரிக்கை நிரல் எதிலும் எவரேனும் வாய்ப்புள்ள வாடிக்கையாளரின் பெயர் காணப்படுகின்றதா என செவ்வைபார்த்தல் வேண்டும்."; அத்துடன்*

*(ஆ) அதன் 13 ஆம் பந்தியில், "13. சேமிப்பு அத்துடன்/அல்லது நடைமுறைக் கணக்குகளுக்கு மூன்றாம் தரப்பினரால் செய்யப்படும் எல்லா பணவைப்பீடுகளும்" என்னும் இலக்கத்திற்கும் சொற்களுக்கும் பதிலாக, "13. சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்குகளுக்கு மூன்றாம் தரப்பினர்களால் செய்யப்படும் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சிய எல்லா பண வைப்பீடுகளும்" என்னும் இலக்கங்களையும் சொற்களையும் இடுவதன் மூலமும்.*

*05- 501*